# ஐம்பெரும் காப்பியங்களில் சமயக் கருத்துக்கள்

21

**ச.சங்கர்கனி, இளங்கலைத்தமிழ்**

**காமராஜ் கல்லூரி, துர்த்துக்குடி..**

ஆய்வுச் சுருக்கம்

தமிழின் ஐம்பெருங்காப்பியங்கள் சிலப்பதிகாரம் மணிமேகலை குண்டலகேசி வளையாபதி சீவகசிந்தாமணி ஆகும். மனித வாழ்க்கையைப் பண்படுத்தும் நோக்கோடு இலக்கியங்கள் தோற்றுவிக்கப்பட்டது. கற்பனை வளமும் இன்பியலும் மட்டுமின்றி சமயம் சார்ந்த வாழ்வியல் சிந்தனைகளும் அக்கால இலக்கியங்களில் இடம்பெற்றன. அவ்வாறே இலக்கியங்களில் இடம்பெற்றன. அவ்வாறே ஐம்பெருங்காப்பியங்களில் சைவ சமண பௌத்த சமயக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.; ஐம்பெருங்காப்பியங்கள் சிலப்பதிகாரம் மணிமேகலை வளையாபதி சிந்தாமணி குண்டலகேசி என்பன ஐம்பெருங்காப்பிங்கள் ஆகும். நன்னூல் உரையாசிரியர் மயிலை நாதரே இச்சொல்லாட்சியை முதன் முதலில் பயன்படுத்தியுள்ளார். சிலம்புஇ சிந்தாமணிஇ வளையாபதி மூன்றும் சமணச் சார்புடையவை. எஞ்சிய இரண்டும் பௌத்தச் சார்புடையவை. அவ்வாறான சமய சிந்தனைகள் குறித்த கருத்துக்களை ஆய்வுக்கட்டுரையில் காணலாம்.

முன்னுரை

பொருளால் தொடர்ந்து வரும் செய்யுள் இலக்கியம் காப்பியம். சிலப்பதிகாரம் மணிமேகலை சீகசிந்தாமணி வளையாபதி குண்டலகேசி பெரும்காப்பியங்கள் ஆகும். காப்பு இயல் காப்பியம். உலகத்துக் காப்பியம் செய்வோன் அறனும் பொருளும் இன்பமும் வீடு ஆறல் வேண்டுமன்ற என்று அடியார்க்கு நல்வார் கூறியுள்ளார். அறம்இ பொருள்இ இன்பம் வீடு ஆகிய உறுதிப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு காப்பியம் அமைக்கப்பட வேண்டும். ஐம்பெருங்காப்பியங்களில் உள்ள சமயச் சிந்தனைகள் பற்றி இங்கு காண்போம்.

சமண சமயம்

வடநாட்டில் மகாவீரர் தோற்றுவித்த சைனசமயம் தமிழகத்தில் சமண சமயமாக நிலைத்து நின்றது. கள்ளுண்ணாமை புலால் உண்ணாமை கள்ளாமை என்பன இவர்கள் கடைபிடித்த அறமாகும். சமண சமயத்தவர்கள் எல்லா நிலையிலும் ஒழுக்கத்தை உயர்வாகப் போற்றிக் காத்தனர். இருண்ட காலம் எனக் கூறப்பெறும் வரலாறுகள் மறைக்கப்பெற்ற காலத்திலும் சமணச் சமயம் தமிழகத்தில் செல்வாக்கு பெற்றது. சிலப்பதிகாரம் சமணசமயம் சேர்ந்த கி.பி. 2ம் நூற்றாண்டு சேர்ந்தவை ஆகும். இதன் அடிகள் 5001 காதைகள் 303 காண்டங்கள் ஆகும். இது மூன்று உண்மைகளைக் கூறுகிறது.

சமயச் சிந்தனைகள்

மனிதன் அச்சுறுத்துகின்ற தீமையினின்று தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் விரும்பியதைப் பெறவும் அவனுக்கும் மேலான ஒரு சக்தியைக் கண்டறிந்தான். இதுவே சமயம் தோன்றுவாற்கு அணிவேராக அமைந்தது. சமணர் முதன் முதலில் தமிழல் இயற்றிய காப்பியம் சிலப்பதிகாரமாகும்.

KAMARAJ COLLEGE
Accredited with A+ Grade by NAAC
இந்து சமுதாய நலச்சங்கங்களால் 1966-ல் தொடங்கப்பட்ட கல்லூரி
(Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli)
THOOTHUKUDI - 628003

சுPலம்பில் அருகதேவனின் பெருமைகளைக் கவுந்தியடிகள் வாயிலாக குறிப்பிடுகிறார். வண்டு நண்டு நத்தை ஆகிய உயிர்களைத் துன்புறுத்தக் கூடாது. கொல்லக்கூடாது என்பது சிலம்பில் சமணம் உணர்த்துவதாகும்.

சிலம்பு – சமயக்கருத்துகள்

சமண்கள் தனித்தனி கோயில்களும் அமைத்தனர். சமணர் பள்ளிகளும் அமைத்தனர். சிலம்பு இவற்றைப் புறநிலைக் கோட்டம்இ நிக்கந்தக் கோட்டம் அருகத்தானம் என்று குறிப்பிடுகிறது. சமணக் கடவுள் அருகன் என்று அழைக்கப்பட்டனர். அருகனின் மற்றபெயர் அறிவன் என்பதாகும் சமணக் கடவுளான அறிவனை (சிலம்பு 10.57) மூன்று திங்களை அடுக்கிடனாற் போன்று இருப்பவனாகவும் அசோகமரத்தின் நிழலடியில் இருப்பான் என்று சிலம்பு குறித்துள்ளது. இதே கருத்து பெருங்கதையிலும் உள்ளது. சிலம்பு சமணர்கள் இல்வாழ்க்கை மேற்கொள்ளும் போது விரதம் இருப்பது வழக்கம். அப்போது உயிர்க் கொலைக்குச் சமமான எப்பொருளையும் உண்ணக்கூடாது என்பது சமணர் கொள்கை.

**“வாய்மையின் வாழாது மன்னுயீர் ஒம்புநர்க்கு யாவதும் உண்டோ எய்தா அருகம்பொருள்”**

**(சிலப்பதிகாரம்:158 159)**

சிலம்பு சைவ சமயம் சிவபெருமானை முழுமுதற்கடவுளாகவும் கொண்டது. சிலம்பில் செங்குட்டுவனின் முன்னிலையில் கத்தச் சாக்கையர் ஆட்டத்தை

**“ தருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பல பரிதரு செங்கையிற் படுவை யார்ப்புவுஞ் வெஞ்சடை சென்று திசைமுக மலப்பவும்”**

**(சிலப்பதிகாரம்:28 67 -75))**

என்ற சிலம்பில் இறைவன் பெண் ஒரு கூறானாய் விளங்குவதைக் குறிப்பிடுகிறார். இறைவனும் இறைவியும் இரண்டு உயிரும் ஒரு உயிராய் விளங்குதானது படைத்தல் துடைத்தல் இல்லறம் துறவறம் சிற்றின்பம் பேரின்பம் ஆகியன ஒன்றோடு ஒன்று இணைத்து விளையுமாயிருப்பதைக் குறிப்பிடுகின்றன. இவ்வாறு சிவனடியார்கள் அணிவது திருவெண்ணீறு என்று குறிப்பு சிலம்பில் உள்ளது. மேலும் சிவபெருமான் திருக்கயிலாயச வெள்ளிமலையில் வீற்றிருந்த காட்சியினை ஆங்கே குறிப்பிடுகிறார். இவ்வாறு சைவ சமய கருத்துகள் புலப்படுகின்றன. பௌத்த சமய அறங்களாக இல்லறம் துறவறம் ஆகிய இரண்டு அறங்களேயுள்ளன. இவ்விரண்டு அறங்களில் ஒழுகுபவர்களும் மும்மணிகளைச் சரணம் அடைய வேண்டுமென்பததை

**“புத்த தன்ம சங்கம் என்னும் முத்திற மணியை மும்மையின் வணங்கி”**

**(மணிமேகலை 30:34)**

என்றும் மும்மணிகள் புத்தம் சரணம் கச்சாமி சரணம் கச்சாமீ என்றும் தன்மம் சதசனம் கச்சாமீ என்றும் சங்கம் சரணம் கச்சாமீ என்று குறிப்பிடுகின்றது.

மணிமேகலை

மதுரைக் கவவாணிகள் சீத்தலைச் சாத்தனார் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இயற்றினர். மேகலை

30 காதைகளும் 4286 அடிகள் கொண்ட நிலைமண்டல ஆசிரியப்பவால் ஆனாது. கொல்லாமைஇ ஊன் உண்ணாமை கள் உண்ணாமை பொய் கூறாமை ஈகை தரும் இன்பம் அனத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்து அழிபசி தீர்ததல் போன்ற கொள்கைகளைக் கொண்டது இந்நூல்.

மணிமேகலை சமய கருத்துக்கள்

இளமை யாக்கை செல்வம் யாவும் நிலையா புதல்வாகளும் மற்றும் எதுவும் இறந்த பிறகு மனிதனைத் தொடர்ந்து வராது. அவனுடன் செல்வது அவன் ஆற்றிய அறங்களே வரும். புதல்வர்களாலும் அளிக்க இயலாத வீடுபேற்றை அறம் என்றே அளிக்க வல்லது என்ற பௌத்த சமயக்கருத்தை

**“இளமையும் நில்வா புத்தேளுலகம் புதல்வருந் தாரார் மிக்க அறமே விழுந் துணையாவது”**

**(மணிமேலை 23:135:138)**

பௌத்த சமயம்

கௌதம் புத்தரால் தோற்றுவிக்கப்பட்டது. இது ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்பது அவருடைய முதன்மையான கொள்கை அவர்கருத்துக்களை ஏற்றுக் கொண்ட மக்கள் பௌத்தர்கள் ஆனார். தமிழ்நாட்டில் பௌத்தம் பரவச் செய்ய பௌத்தர்கள் தம் சமயக் கொள்கைகளைப் பரப்பி வந்தனர். பிறகு அசோகர் காலத்தில் தமிழகத்தில் ஊடுருவியது. பூம்புகார்இ பூதமங்கலம்இ காஞ்சிபுரம் போன்ற ஊர்கள் பௌத்தத்தின் தலைமை இடங்களாக இருந்தன. பௌத்த மதத்தின் தாக்கத்தால் தமிழில் பாலிமொழிச் சொற்கள் பல நுழைந்தன. பாலிமொழி; சொற்க் தருக்க நூல்களும் காப்பியங்கள் தோன்ற காரணமாயிற்று. அவற்றுள் மணிமேகலை பரத்தையர் குலத்தில் பிறந்த மணிமேகலை என்ற பௌத்த துறவியின் தொண்டினைப் பற்றிக் கூறுகின்றது. காப்பியத் தலைவி பெயரால் இது மணிமேகலை மணிமேகலை துறவு சிறைபொழிப்பு சாதியொழிப்பு போன்ற கருத்துக்களை அறிவுறுத்துகின்றது.

பௌத்த சமயக் கொள்கைகள்

கொல்லாமை கள்ளாமை பிறனில் விழையாமை பொய்கூறாமை கள்ளுண்ணாமை தகாத நேரத்தில் உணவு கொள்ளாமை கேளிக்கைகளை நாடாமை நறுமணப் பொருள்களை விரும்பாமை உயரமான பீடங்களை நீக்குதல் விலையுயர்ந்த பொருள்களை விரும்பாமை ஆகியவற்றை விரதமாகக் கொண்டுள்ளனர் பௌத்தர்கள் என்று மணிமேகலையில் குறிப்பிடுகின்றது. மணிமேகலையில் சைவம் புகார் நகரத்தில் வாழும் மக்கள் பல கோயில்களில் வழிபாடு நிகழ்த்துகின்றனர். அவற்றுள்ளும் நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமான'யே முதன்மையாக மக்கள் கொண்டுள்ளன..

**“நூதல்வழி நாட்டத்து இறையோன் முதலாப் புதிவாழ் சதுக்கத்துத் யாற்றி மரபினறிந்தோர் செய்யுமின்”**

எனும் வரிகளில் சாத்தனார் மொழிந்துள்ளனர்.

சீவக சிந்தாமணி சமயக் கருத்துகள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் மற்றோர் அதிகாரத்தைத் தோற்றுவித்துள்ளது. விருத்தம் என்னும் பாவினைத்திறம்பட அமைத்துக் காப்பியம் பாடிய முதல் கவிஞராக இதன் ஆசிரியர் திருத்தக்கதேவர் விளங்குகிறார். சுமண சமய தத்துவத்தில் ஒன்பது பொருள்கள் இவற்றை உயிர்இ உயிரல்லது

புண்ணியம் பாவம் ஊற்று செறிப்பு உதிர்பு காற்று வீடு என நவபதார்த்தம் என்பர். இந்த ஒன்பது பொருளின் உண்மையை அறிந்துக்கொள்வது நன்ஞானம் என்றும் இவற்றின் தன்மையை ஐயப்பாடின்றி உணர்ந்துக் கொள்வது நற்காட்சி என்றும் தன்ஞானம் இரண்டையும் எழுதன்மைத்தாக மனதிற்கொண்டு கூறுவது நல்லொழுக்கம் என்று கூறப்படுகிறது.

**“மெய்வகை தெரிதல் ஞானம் விளங்கிய பொருள்கள் தம்மைப் பொய்வகை இன்றி தெறல்காட்சி ஐம்பொறியும் வாட்டி உய்வகை உயிரைத் தேயா தொழுகுதல் ஒழுக்கம்”**

**(சீவகசிந்தாமணி: 1436)**

என்று குறிப்பிடுகிறது சமணசமய மாவிருதங்கள் ஐந்தாகும். அவை அகிம்மை வாய்மை கள்ளாமை துறவு அவா அறுத்தல் போன்றவை ஆகும். என்று (சீவகம் முத்தி 2824) குறிப்பிடுகின்றது.

வளையாபதி சமண சமயம்

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் 73 பாடல்கள் கொண்ட விருத்தப்பாவகையில் ஆனது. இளமைஇ இன்பம்இ பொருள் முதலானவற்றின் நிலையாமை கருத்துக்களைக் கூறுகின்றது. நவகோடி நாராயணன் ஒரு வணிகன். இவன் வேறுசாதிப் பெண்ணை மணந்தான். இதனால் அவன் குலத்தோர் வெறுக்க வெறுப்பைத் தாங்க இயலாது அவனும் அயல்நாடு சென்றுவிட அவன் மனைவிக்குப் பிறக்கும் மகன் வளர்ந்த பின் புகாரில் தன் தந்தையகை; கண்டு இறுதியில் தாய் தந்தையரை இணைத்து வைக்கிறான் என்று வைசியபுராணம் கூறுகிறது. நிக்கந்த வேடத்து இருடிகணம் மற்றும் அறிவன் என்னும் குறிப்புகள் நூலில் காணப்படுவதால் இக்காப்பியம் சமண சமயம் சார்ந்தது என்பர்.

குண்டலகேசி பௌத்த சமயம்

ஆசிரியநாதருத்தாளன். கி.பி 9ஆம் நூற்றாண்டு என்பர். காப்பியத் தலைவியால் பெயர் பெற்ற நூல் சுருண்ட கூந்தலை உடையவர் என்பது பொருள் பௌத்த கதைபேசும் தேரிகாதையின் 46ஆம் காதையிலும் நீலகேசி அங்குத்தர நிதாய தம்மபதாட்டகதா வைசிய புராணத்தின் 34ஆம் அத்தியாயம் ஆகியவற்றில் குண்டலகேசி கதை உள்ளது.

துணைநூற்பட்டியல்

சீவக சிந்தாமணி
மெய்யப்பன் பதிப்பகம்
சென்னை
சிலப்பதிகாரம்
புலியூர் கேசிகன் உரை
பாரி நிலையம்
சென்னை
ஐம்பெரும் காப்பியங்கள்
இலக்கியம் உமா பதிப்பகம்